பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය - පරිපාලන
Office of the Deputy Chief Secretary - Administration

மாகாண சபை வளாகம் A9 வீதி, கைதடி | පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කෛතඩි | Council Complex A9 Road, Kaithady

எனது இல / මගේ අංකය / My No } NP/02/07/GN/01

Date: 25.01.2021

**வடமாகாண சபைக்கான ஒழுக்காற்று விசாரணை அலுவலர் குழாமில் புதிய அலுவலர்களை இணைத்துக்கொள்ளல்**

வடமாகாண சபைக்கான ஒழுக்காற்று விசாரணை அலுவலர்கள் குழாமில் புதிய அலுவலர்களை இணைத்துக்கொள்வதற்காக தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1) **தகைமைகள்:-**
   a. **ஓய்வு பெற்ற அலுவலராயின்,** தனது சேவைக் காலத்தில் தாபன விதிக்கோவையின் முதலாம் அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றமொன்றுக்கு தண்டிக்கப்படாத அல்லது தனது சேவைக் காலத்தில் தாபன விதிக்கோவையின் இரண்டாம் அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றமொன்றை புரிந்த பின்னர் 05 ஆண்டு காலம் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்தவர்களுமான, பதவிநிலை அலுவலராக பத்து வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய சேவைக் காலத்தினையுடைய அலுவலர்கள்.
   b. **சேவையிலுள்ள அலுவலராயின்,** தனது சேவைக் காலத்தில் தாபன விதிக்கோவையின் முதலாம் அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்றுக்கு தண்டிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும் அல்லது தனது சேவைக் காலத்தில் தாபன விதிக்கோவையின் இரண்டாம் அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றமொன்றை புரிந்த பின்னர் 05 ஆண்டு காலம் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   c. **சட்டத்தரணிகளாயின்,** பத்து வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய சேவைக் காலத்தினையுடையவர்கள்.
2) **கடமைப் பரப்பு** :- வடமாகாணம்
3) **தெரிவு முறை** :- நேர்முகத் தேர்வு
4) **கொடுப்பனவுகள்** :- 2018.08.01-ஆம் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2018 இற்கமைய வழங்கப்படும்.
5) **விண்ணப்ப முடிவுத் திகதி** :- 28.02.2021
6) **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி** :- பிரதிப் பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்- நிர்வாகம், வடமாகணம், வடமாகாண சபை வளாகம், கைதடி

மேற்படி விடயங்களின் அடிப்படையில் பொருத்தமானவர்களை வடமாகாண சபையின் விசாரணை அலுவலர் குழாத்தில் இணைத்துக்கொள்வது தொடர்பான இறுதி தீர்மானம் கௌரவ ஆளுநரின் அதிகாரத்திற்குட்பட்டதாகும்.

**அ.பத்திநாதன்,**
பிரதம செயலாளர்
வடமாகாணம்

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary } Tel : 021 222 0843 (Dir) : 021 222 0840 (Gen) Fax : 021 222 0841 E-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary } Tel : 021 223 2351 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 E-mail :ppas.np@gmail.com